
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1026

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

36

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



# பத்ரி வீழ்த்தப்படவில்லை, விதையாக்கப்பட்டார்!

திருவல்லிக்கேணி ஐஸ் அவுஸ் பகுதியில், 1992-ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை மசூதி வழியாக நடத்தி, கலவரத்தில் முடிக்க முயன்றனர் சிலர். அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது வி.எம்.தெரு. அடுத்த ஆண்டில் வி.எம்.தெருவுக்குள்ளும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை நடத்த முயன்றார் ராமகோபாலன். அந்த முயற்சியை முறியடித்து, கலவர நோக்கத்தைத் தடுத்ததுடன், ஐஸ் அவுஸ் பகுதியில் விநாயகர் சிலை ஊர்வலங்களுக்கு எதிர்ப்பாக பெரியார் கைத்தடி ஊர்வலத்தை நடத்தி, சமூகப் பதற்றத்தை தணித்தார் பத்ரி.

அதேபோல, 2001-இல் அமெரிக்க இரட்டை கோபுரத் தாக்குதலின்போது இஸ்லாமியர்களை பயங்கரவாதிகளாக சித்தரிக்க முயன்றன மேற்குலக நாடுகள். மேடை ஏறி பேசவே கூச்சப்படும் குணம் கொண்ட பத்ரி, இஸ்லாமிய அமைப்புகளை அழைத்துவந்து மேடை அமைத்துக்கொடுத்து, மேற்குலக நாடுகளின் சூழ்ச்சிகளை, எளிய மக்களும் உணரச் செய்தார். சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று, உயிர்நீத்த திருவையாறு மஜீத்தின் நினைவாக தனது மகனுக்கு 'மஜீத்' என்றே பெயர் சூட்டினார்.

> வி.எம்.தெருவில் சமூக விரோதச் செயல்பாடுகளுக்கு முடிவுகட்டி நூற்றுக் கணக்கான இளைஞர்களை, திராவிட இயக்க கருத்தியல்வாதிகளாக வளர்த்தெடுத்த ஆளுமை பத்ரி நாராயணன். அவரை அழித்துவிட்டால், சமூக விரோதிகள் தங்கள் விருப்பம்போல செயல்படலாம் என்று கருதினர். ஆனால், 20 ஆண்டுகள் கடந்த பின்னும் பத்ரி உருவாக்கிய கொள்கைப்படை இன்றும் வீரியமாக இருக்கிறது. அவரை வீழ்த்தியவர்கள்தான் எவரும் இல்லை.
>
> 
>
> – இரா.உமாபதி,
> ஒருங்கிணைந்த சென்னை மாவட்டச் செயலாளர்,
> திராவிடர் விடுதலைக் கழகம்.

பத்ரியின் நல்லிணக்கப்போக்கு மதத்தைக் கடந்தது மட்டுமல்ல, அரசியலையும் கடந்தது. வி.எம்.தெருவில் ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி 12-ஆம் நாள் பொங்கல் விழாவை, பாகுபாடு இல்லாமல் அனைத்துக் கட்சியினரையும் இணைத்து நடத்தும் வழக்கத்தை உருவாக்கினார். பத்ரியின் இத்தகைய ஓயாத களப்பணிகள் நூற்றுக்கணக்கான இளைஞர்களை பெரியாரியப் பாதை நோக்கி இழுத்தது. அவர்களையும் கருப்புச்சட்டை அணியச் செய்தது. மதத்தில் இருந்தும் சாதியில் இருந்தும் அவர்களை விடுவிக்கச் செய்தது. இச்செயல்களை விரும்பாதவர்களின் கொடூர சிந்தனைக்கு இரையாக்கப்பட்டார் பத்ரி. ஆனால், பத்ரியின் மறைவு வீழ்ச்சியாக அல்லாமல், விதையானது.

பத்ரி நாராயணனோடு அப்பகுதியில், திராவிட இயக்கத்தின் கதை முடிவுக்கு வந்துவிடும் என்று கருதியவர்களின் எண்ணம் பொய்த்துப்போனது. பத்ரி நிறுவிய பெரியார் சிலைக்கு அருகிலேயே, பத்ரி நாராயணன் பெயரில் 2006-இல் படிப்பகம் உருவானது.

அவருடைய மறைவுக்குப் பிறகு ஒருவர்கூட தங்கள் கருப்புச்சட்டையைக் கழற்றி விடவில்லை. மாறாக, அதன்பிறகும் நூற்றுக்கணக்கானோர் கருப்புச்சட்டை அணிந்தனர். அவர் தொடங்கிவைத்த பொங்கல் விழா கால் நூற்றாண்டு காலமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. 2023-இல் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொள்ளும் அளவுக்கு மாபெரும் மக்கள் திருவிழவாக பொங்கல் கொண்டாட்டம் அங்கு உருவெடுத்துள்ளது.

பத்ரி நாராயணன் வாழ்ந்த காலத்தில் செய்த பணிகள் எதுவும் நின்றுவிடவில்லை. பெரியார் பிறந்த நாள் விழாக்கள், சாதி ஒழிப்புப் பரப்புரை, திராவிட இயக்கக் கொள்கைப் பிரச்சாரங்கள் என பத்ரியின் காலத்தை விட வேகமாக இயங்கும் இளைஞர் படை, அதன் பின்னால் வி.எம்.தெருவில் உருவானது. பத்ரியின் வாழ்வும், பணிகளும் அவர்களுக்கு வழிகாட்டியானது.

...பயணிப்போம்.

## திராவிடப் பெண் - தரவுகளின் வழி...




பெண்கள் மறுமலர்ச்சிக்கும், சீர்திருத்தத்துக்கும் குரல் கொடுத்த இயக்கம் சுயமரியாதை இயக்கம். பெண் விடுதலை என்பது, சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. பெரியார் முன்னெடுத்த சுயமரியாதைக் கருத்தியலை ஏற்று இயங்கிய பெண்கள் குறித்தும், சுயமரியாதை இயக்கம் முன்னெடுத்த பாலின சமத்துவக் கோட்பாடுகள் குறித்தும் பேசும் வகையில், பாரதி புத்தகாலயம் வழி வெளிவந்துள்ள நூல் 'திராவிடப் பெண்'.

டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பெண்ணிய ஆய்வு மையத்தில், உதவிப் பேராசிரியராக பணிபுரியும், தமிழ்நாட்டைச் சேர்ந்த ச.ஜீவானந்தம், எழுதியுள்ள இந்த நூல், ஆய்வுக் குறிப்புகளுடன் சுயமரியாதை இயக்கத்தின் பெண்ணியச் செயல்பாடுகளை பேசுகிறது.

சுயமரியாதை இயக்கத்தின் ஆளுமை மிக்கப் பெண்கள், சுயமரியாதை இயக்கமும் பெண்ணிய விடுதலையும், அக வாழ்க்கையும் பெண்ணின விடுதலையும், மதமும் பெண்கள் விடுதலையும் என தனித்தனி தலைப்புகளில் சுயமரியாதை இயக்கச் செயல்பாடுகளை அலசுகிறது.

பெரியார் முன்வைத்த பெண்ணியம், பெண் விடுதலை ஆகியவற்றை உரிய தரவுகளுடன் பேசும் இந்த நூல், 'புரட்சி', 'குடிஅரசு', 'விடுதலை', 'பகுத்தறிவு', 'ரிவோல்ட் (Revolt)' என பல இதழ்களில் இருந்து குறிப்புகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. 'நூலில் உள்ள எந்த ஒரு தகவலும் இட்டுக்கட்டியோ, புனையப்பட்டோ எழுதப்படவில்லை என்பதைக் குறிப்பிடுகிறார் ச.ஜீவானந்தம். அதுவே, இந்த நூலின் அவசியத்திற்கான சான்று.

நூலைப் பெற : 8778073949 எண்ணுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

## ஃப்ளாஷ்பேக்



ஜே.கே.எஸ்.மாணிக்கம்



### இளைஞர் அணியில் சூறாவளிப் பயணத்தில் ஒரு படம்!

1965-ஆம் ஆண்டில் மாணவர் அணியில் இணைந்து செயல்படத் தொடங்கினேன். தந்தையார், கழக முன்னோடி ஜே.கே.கே.சுந்தரம் அவர்களின் வழித்தடத்தில் மாறாத கழக உணர்வு கொண்டு இயங்கி வருகிறேன். கிளைக் கழகப் பிரதிநிதியாக இரண்டு முறை, மாவட்டப் பொதுக்குழு உறுப்பினராக ஒருமுறை, மாநில செயற்குழு உறுப்பினராக இரண்டு முறை என கழகப் பொறுப்புகளில் பணியாற்றி, தற்போது சொத்துப் பாதுகாப்பு குழு உறுப்பினராக இரண்டாவது முறையாக செயல்பட்டு வருகிறேன். இந்த படம், 30 ஆண்டுகளுக்கு முன் கழகப் பணிகளுக்காக, ஈரோடு வந்த தளபதி–இன்றைய கழகத் தலைவர் அவர்கள் எங்கள் இல்லத்துக்கு வருகை தந்தபோது எடுக்கப்பட்டது.இளைஞர் அணியில் அவர் சூறாவளியாகச் சுழன்ற காலங்களில் எடுக்கப்பட்ட படம், காலத்தை தேக்கி வைத்துள்ளது.

– ஜே.கே.எஸ்.மாணிக்கம்,
கழக சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர்
குமாரபாளையம், ஈரோடு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

86

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''



# அரசியல் தெளிவடையும் அடுத்த தலைமுறை!

***தி.மு.க. இளைஞர் அணி சிறப்பாக நடத்திய அறிவுத்திருவிழாவை, விமர்சித்து அறிக்கை விடுகிறார்களே?***

அறிக்கை அரசியலாளர்களுக்கு ஒரு வரி பதிலை, தி.மு.க இளைஞர் அணிச் செயலாளரான துணை முதலமைச்சர் சொல்லிவிட்டார், "அறிவு இருப்பவர்கள் அறிவுத் திருவிழா நடத்துகிறார்கள்" என்று. இத்தகைய அறிவுத் திருவிழாவை நடத்த முடியாதவர்கள்-அது பற்றி சிந்தனையில்லாதவர்கள் தங்கள் அறிக்கையில் அவதூறுகளைப் பரப்பி வயிற்றெரிச்சலை வெளிப்படுத்துகிறார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், தி.மு.க.வின் அடுத்த தலைவராக இளைஞர் அணிச் செயலாளரை முன்னிறுத்த நடத்தப்படும் விழா என்று விமர்சிக்கிறார்கள். இந்த விமர்சனமும் கழக உடன்பிறப்புகளின் மன உணர்வை அறியாத விமர்சனம். ஏனென்றால், துணை முதலமைச்சரை 'இளந்தலைவர்' என்றே கழகத்தின் அனைத்துத் தரப்பினரும் கொண்டாடுகிறார்கள். தி.மு.க.வில் வாரிசு அரசியல் என்று கூப்பாடு போடுபவர்களின் அச்சம் என்னவென்றால், தாங்கள் எப்படியாவது அழிக்கத் துடிக்கும் தி.மு.க.வுக்கு அடுத்த தலைமையும் கொள்கைப்பூர்வமான வலிமைமிக்க-மக்கள் ஏற்புடைய தலைமையாக அமைகிறதே என்பதுதான்.

அறிவுத்திருவிழா என்பது தி.மு.க.வுக்கு புதியதல்ல. ஏனெனில், திராவிட இயக்கமே ஓர் அறிவியக்கம். 110 ஆண்டுகளை எட்டியுள்ள 'நீதிக்கட்சி' எல்லாருக்குமான கல்விக்கு அடித்தளமிட்டது. நூற்றாண்டு நிறைவு செய்த சுயமரியாதை இயக்கத்தின் தலைவரான பெரியார், 'மானமும் அறிவும் மனிதருக்கு அழகு' என்றார். திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் பல பத்திரிகைகளை நடத்தி, பல புத்தகங்களையும் வெளியிட்ட இயக்கம். ஒவ்வொரு மாநாட்டிலும் கலைநிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், நாடகங்கள் இவற்றுடன் புத்தக விற்பனையும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். கட்சிக் கிளைகள் தோறும் படிப்பகங்களை அமைத்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அதன் மூலம் கிராமத்தில் இருந்த பாமரரும் நாட்டு நடப்புகளை அன்றாடம் தெரிந்துகொண்டு, அரசியல்மயமானார்கள்.

எளிய மக்களை அரசியல்படுத்தி, அவர்களை மிகப் பெரும் ஜமீன்தார்கள், பண்ணையார்கள், ராஜாக்கள் ஆகியோருக்கு எதிராகக் களமிறக்கி தேர்தலில் மகத்தான வெற்றி கண்ட வரலாற்று இயக்கம் தி.மு.கழகம். அதற்கான அறிவாயுதத்தை அண்ணா காலத்திலும் ஏந்தி நின்றது. கலைஞர் காலத்திலும் ஏந்தி நின்றது. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் காலத்திலும் ஏந்தி நிற்கிறது. அடுத்த தலைமுறையையும் அரசியல் தெளிவுள்ளவர்களாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் இளைஞர் அணிச் செயலாளர் அறிவுத்திருவிழாவை நடத்தி, புத்தக வெளியீடு-கருத்தரங்குகள்-முற்போக்கு புத்தகக் காட்சி என வள்ளுவர் கோட்டத்தை அறிவுக் கோபுரமாக உயரச் செய்திருக்கிறார். அறிவிலிகள் அச்சப்படுவது நியாயம்தானே.

...வினா தொடரும்.

## நம் வரலாறு — உருக்கம்

### விலைவாசி உயர்வு போராட்டப் பலிகள்!

1962-ஆம் ஆண்டு, ஜூலையில் விலைவாசி உயர்வுப் போராட்டத்தின்போது, திருவில்லிபுத்தூரில் மறியல் செய்து கைதானவர்களில் பொற்செழியன் என்கிற கழகத் தோழர் சிறையில் உடல்நலம் பாதிக்கப்பட்டார். மோசமான சிறை உணவு காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்ட அவர் மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி ஆகஸ்ட் 23 அன்று மறைந்தார். அதேபோல, சென்னையில் மூன்று மாதம் சிறைதண்டனை பெற்ற கோ.சு.மணி என்கிற தோழர், உடல்நலம் பாதிக்கப்பட்டு, அக்டோபர் மாதம் 12-ஆம் தேதி மறைந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131